# மேல்விஷாரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் சந்திரகலா ஆய்வு



**ராணிப்பேட்டை, நவ, 12-**

இ ரா ணிப் பேட்டை மாவட்ட கலெக்டர் சந்திர கலா மேல்விஷாரம் நகராட்சி, அண்ணா சாலை,மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அருகே உள்ள கழிவுநீர் கால்வாயினை

பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கால்வாயில் உள்ள குப்பைக் கழிவுகளை அவ்வப்பொழுது குறிப்பிட்ட கால இடைவெளியில் சுத்தம் செய்யுமாறு நகராட்சி ஆணையாளருக்கு அறிவுருத்தினார்.

தொடர்ந்து, வார்டு 18, ஹன்சா நகரில் மக்கும் குப்பைகளிலிருந்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தின் (எம் சி சி) செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பொதுமக்கள் குப்பைகளை தெருக்களில் ஆங்காங்கே போடாதவாறு போதிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்துமாறும், குப்பைகள் சேகரிப்பு பெட்டிகளை ஆங்காங்கே வைக்குமாறும், குப்பைகளை தினந்தோறும் அப்புறப்படுத்தவும், மேலும், இப்பகுதியில் சரியான முறையில் நடைபாதையை அமைத்து கொடுக்கவும் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுருத்தினார்.

தொடர்ந்து, வார்டு 7, முத்துக்கொள்ளை பகுதியில் மழைநீர் தேங்கியிருந்ததை பார்வையிட்டார். அப்பொழுது அங்கிருந்த ஒருவர் இப்பகுதியில் உள்ள கால்வாயில் ஆக்கிரமிப்பு உள்ளது, ஆக்கிரமிப்பை அகற்றினால் இங்கு மழைநீர் தேங்காது என மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்ததை தொடர்ந்து, உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றிடுமாறு நகராட்சி ஆணையாளருக்கு மாவட்ட கலெக்டர் உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து, வார்டு 17, எம்ஜிஆர் நகரில் மக்கும் குப்பைகளிலிருந்து நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்தின் ( எம் சி சி) செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்பொழுது நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்திற்கு செல்லும் வழியில் கழிவுநீர் சாலையின் மேல் சென்று கொண்டிருந்ததை பார்த்து, அதனை உடனடியாக சீரமைத்து, நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையத்திற்கு செல்ல சரியான சாலை வசதியை அமைத்து கொடுக்க வேண்டுமென நகராட்சி ஆணையாளருக்கு அறிவுருத்தினார்.

பின்னர், வார்டு 15, தஞ்சாவூரான் காலனியில் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலிருந்து வரும் கழிவுநீர் பாலாற்றில் கலப்பதற்கு முன்பாக கழிவுநீர் சுத் தி க ரிப் பு நி லை யம் அமைப்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க நகராட்சி ஆணையாளருக்கு அறிவுருத்தினார்.

இந்த ஆய்வுகளில் நகராட்சி ஆணையாளர் பழனி, பொறியாளர் சரவணன், நகர மன்ற தலைவர் பொறுப்பு குல்ஜார் அஹமது மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜபர் அஹமத் மற்றும் வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய நிறைவு கூட்டம்



**செங்கம் டிச.12**

செங்கம் தாலுக்கா புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய ஒன்றிய குழு ஐந்தாண்டு கால நிறைவு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஒன்றிய குழு தலைவர் சுந்தர பாண்டியன் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது புதுப்பாளையம் ஒன்றியத்தில் ஒன்றிய குழு தலைவராக எனக்கு கடந்த 10 ஆண்டுகளும் அதற்கு முன் எனது மனைவி பொன்னி சுந்தரபாண்டியனுக்கு 10 ஆண்டுகள் ஒன்றிய குழு தலைவராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இருபது ஆண்டுகள் ஒன்றிய சேர்மெனாக பணியாற்றும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது.

இந்த முறை சேர்மெனாக பொறுப்பேற்றது கொரோனா காலம் எனினும் கொரோனா நிவாரண பணிகளை நிறைவேற்றி அனைத்து ஊராட்சிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளை முடிந்த அளவு நிறைவேற்றப்பட்டு உள்ளது. ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட அமைச்சர் எ.வ.வேலு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அலுவலர்கள் அனைத்து ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு நன்றி என ஒன்றிய குழு தலைவர் சுந்தர பாண்டியன் பேசினார். கூட்டத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சம்பத் நிர்மலா முன்னிலை வகித்தனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி முடிவில் நன்றி கூறினார்.

கூட்டத்தில் ஒன்றிய குழு துணை தலைவர் சசிகலா உதயசேகரன் மற்றும் ஒன்றிய கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்

# காரப்பட்டு அரசு பள்ளியில் கணித மன்ற விழா



**செங்கம் டிச.12**

செங்கம் தாலுக்கா புதுப்பாளையம் ஒன்றியம் காரப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் கணித மன்ற விழா நடைபெற்றது. தலைமை ஆசிரியர் வினோத் தலைமை தாங்கினார். உதவி தலைமை ஆசிரியர்கள் தமிழ் மதி என்கிற மணிவண்ணன் தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் கோபாலகிருஷ்ணன் வரவேற்று பேசினார். கணித ஆசிரியர்கள் ஹரிகிருஷ்ணன் லதா ரம்யா ஆகியோர் வாழ்த்தி பேசினர். கணிதம் சம்பந்தமான போட்டிகள் கலை நிகழ்ச்சிகள் நடத்தி மாணவர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. முடிவில் ஆசிரியர் லதா நன்றி கூறினார். கூட்டத்தில் செந்தில் உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# ஆற்காட்டில் தொழில் வரி உயர்வை ரத்து செய்ய கோரி வணிகர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்




**ராணிப்பேட்டை, டிச,12 -**

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு ராணிப்பேட்டை மாவட்டம் சார்பாக தொழில் வரி உயர்வு ரத்து செய்யக்கோரி கண்டண ஆர்பாட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் புதன் கிழமை நடைபெற்றது.

ஆர்ப் பாட் டத் திற்கு மாவட்ட தலைவர் பொன். கு. சரவணன் தலைமை வகித்தார், மாவட்ட செயலாளர் கே வேல்முருகன், பொருளாளர் செல்வராஜ், மாநில துணைத்தலைவர் சௌகத் அலி, மாவட்ட செய்தி தொடர்பாளர் சுபாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மத்திய அரசு கடைகளின் வாடகை மீதான 18 சதவீத வரி விதிப்பை திரும்ப பெற வேண்டும் மாநில அரசு ஆண்டுதோறும் 6 சதவீதம் கூடுதல் சொத்து வரிவிதிப்பை திரும்ப பெற வேண்டும் ,வணிக உரிமை கட்டணம் உயர்வு மற்றும் தொழில் வரி உயர்வை ரத்து செய்யக் செய்யவேண்டும்,

குப்பைவரியை மாநில முழுவதும் ஒரே சீராக அறிவித்திட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை தலைவர்கள் பாஸ்கரன், வேலு,கிருஷ்ணன்,ஏகாம்பரம், காசி,சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் ஏ.வி.டி பாலா, அன்பரசு, சரத்குமார், லோகநாதன்,ராஜசேகர் உமாபதி மற்றும் பெல். எஸ். பிரபு வாலாஜாா ராஜா கே. எஸ் .வேலன் நகர நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஆற்காடு நகர அனைத்து வியாபாரிகள் சங்க பொருளாளர் பரத்குமார் நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## செங்கம் பகுதியில்

# மழையால் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு எம்எல்ஏ மு.பெ.கிரி நிவாரண உதவி



**செங்கம் டிச.12**

செங்கம் ஒன்றியம் நீப்பத்துறை பகுதியில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டு இருளர் காலனி அம்பேத்கார் நகர் பகுதியில் இருந்து மீட்கப்பட்டு மாற்று இடத்தில் தங்க வைக்கப்பட்டு உள்ளவர்களுக்கு 200க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அரிசி காய்கறி மளிகை பொருட்கள் போன்ற நிவாரண உதவிகளை செங்கம் தொகுதி எம்எல்ஏ மு.பெ.கிரி தன் சொந்த செலவில் வழங்கினார்.

உடன் திமுக நிர்வாகிகள் ஒன்றிய செயலாளர்கள் கோளாப்பாடி செந்தில் அந்தனூர் மனோகரன் பிஞ்சூர் ஏழுமலை மாவட்ட கவுன்சிலர்கள் ராவந்தவாடி செந்தில் சகுந்தலா ராமஜெயம் கட்டமடுவு சேட்டு நீப்பத்துறை கோகுலவாணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்

## குறு,சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பில்

# தொழில்முனைவோர்கள் எளிதாக தொழில் தொடங்க பயன்படும் உத்யம் பதிவு சான்றிதழ் குறித்த விழிப்புணர்வு முகாம்

### கலெக்டர் வே.இரா.சுப்புலெட்சுமி சான்றிதழ்களை வழங்கினார்



**வேலூர், டிச.12**

வேலூர் கலெக்டர் வே. இரா. சுப்புலெட்சுமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சார்பில் தொழில்முனைவோர்கள் எளிதாக தொழில் தொடங்க பயன்படும் உத்யம் பதிவு சான்றிதழ் குறித்த விழிப்புணர்வு முகாமை தொடங்கி வைத்து, தேனீ வளர்ப்பு திறன் பயிற்சி பெற்ற தொழில்முனைவோருக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அவற்றின் இயந்திர தளவாடங்களின் மீதான முதலீடு மற்றும் ஆண்டு விற்பனை வருவாய் ஆகிய இரட்டை அளவுகோலின்படி வகைப்படுத்தப்படுகின்றன. இந்நிறுவனங்கள் உத்யம் பதிவு சான்றிதழ் பெறுவதன் மூலம் தம் நிறுவனத்தை நிரந்தரமாக அரசு அங்கிகாரத்துடன் பதிவு செய்து கொள்ளலாம். உத்யம் பதிவு செய்வது இணைய வழியாக மிக எளிய செயல்முறைகளை கொண்ட கட்டணமில்லா செயல்முறை ஆகும்.

உற்பத்தி, வாணிப அல்லது சேவை தொழில் நிறுவனத்திற்கு அரசு ரீதியிலான அங்கீகாரம் பெற விரும்பும் நிறுவனங்கள் *udyamregistration.gov.in* என்ற இணையதளத்தின் வாயிலாக எளிதாக உத்யம் பதிவு சான்றிதழ் பெறலாம்.

உத்யம் பதிவு சான்றிதழ் குறித்து குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தம் முகாமை வேலூர் கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி, டார்லிங் ரெசிடன்ஸியில் தொடங்கி வைத்தார்.

பின்னர் கலெக்டர் தேனீ வளர்ப்பு குறித்து தேசிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன மையத்தில் திறன் பயிற்சி பெற்ற 4 தொழில்முனைவோருக்கு சான்றிதழ்களை வழங்கினார்.


இம்முகாமில் கலெக்டர் தெரிவித்ததாவது.

நம்முடைய நாட்டில் ஏற்றுமதியாகும் உற்பத்தி பொருட்களில் 50 சதவீத பொருட்கள் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் உற்பத்தி பொருட்களாகும். மேலும் நம்முடைய பொருளாதாரத்தில் GDP யில் 29 சதவீத பங்களிப்பு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பாகும். இந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழில்புரிய எளிமையான வழிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். இவர்களுக்கு பெரிய பொருளாதார பின்புலம் இருக்காது.

இவர்கள் தங்களுடைய உழைப்பை மட்டுமே நம்பி தொழில்களை தொடங்குகின்றனர். இவர்களுக்கு எளிய வழிமுறைகளை ஏற்படுத்தவும், பொருளாதாரத்தில் அவர்களுக்கு உதவிபுரிய பல்வேறு திட்டங்களின் கீழ் வங்கி கடனுதவிகளும் அரசின் சார்பில் வழங்கப்படுகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொழில் தொடங்குவதற்கு எளிய வழிமுறைகளை ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டதே உத்யம் பதிவு சான்றிதழ் முறையாகும். உத்யம் பதிவு சான்றிதழ் பெற்ற நிறுவனங்கள் மத்திய மாநில அரசுகள் வழங்கும் சலுகைகள், அவை செயல்படுத்தும் திட்டங்களின்கீழ் எளிதாக பயன் பெறலாம். மேலும் அரசு மற்றும் அரசு சார்ந்த பொது துறை நிறுவனங்கள் வெளியிடும் ஒப்பந்தங்களில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உத்யம் சான்றிதழை பயன்படுத்தி வைப்புத்தொகை வழங்குவதிலிருந்து விலக்கு பெறலாம். எனவே வேலூர் மாவட்டத்திலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் உத்யம் பதிவு சான்றிதழ் பெற வேண்டுமென கலெக்டர் வே.இரா. சுப்புலெட்சுமி தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் ரமணி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஜமால் மொய்தீன், தொழில் மைய உதவி இயக்குநர் சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**செங்கம் ஒன்றியம் தெற்கு பகுதியில் உள்ள ராவந்தவாடி உள்ளிட்ட கிராம அரசு பள்ளிகளில் மேல் புழுதியூர் டாக்டர் அம்பேத்கர் காவலர் பயிற்சி அகாடமி சார்பில் போதை பொருட்கள் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் அகாடமி நிறுவனர் சம்பத் வளவன் ஒருங்கிணைப்பாளர் சிலம்பு ஆகியோர் துண்டு பிரசுரங்கள் வழங்கி பிரச்சாரம் செய்தனர்.**

# தலித்பெண்கள் மீதான வன்முறை: உரத்த குரல் மாநாட்டில் கண்டனம்

**அரக்கோணம் டிச.12**

சால்வேஷன் ஆர்மி சோசியல் சர்வீஸ் மஹாலில் மனித உரிமைகள் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு உரத்த குரல் எழுச்சி மாநாடு நடைபெற்றது இந்த மாநாட்டிற்கு எத்திராஜ் கல்லூரி எச் ஓ டி அரங்க மல்லிகா தலைமை தாங்கி பேசினார். தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்க தலைவர் அரக்கோணம் பர்னாட் பாத்திமா வரவேற்று பேசினார் தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம் சார்பில் நடந்த மாநாட்டில் பெண்கள் மீதான வன்முறை கண்டிக்கும் தலைப்பில் வழக்கறிஞர்கள் அஜிதா, உமாதேவி, வேலூர் ஐசக் கதீர், அருள், தேவநேயன், ஹாலின் மரியாள் ஆகியோர் பேசினர் .

மேலும் கோட்டைக்காடு கோமளா கடலூர் ஆரோக்கியா மேரி திருவள்ளூர் மாவட்டம் உமா ராதா கவிதா உள்ளிட்ட பலரும் பங்கேற்று பேசினார்கள் போதை பொருட்கள் நடமாட்டத்தை அரசு ஒழிக்க வேண்டும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கடுமையான சட்டங்கள் மூலம் அடக்க வேண்டும் பஞ்சாயத்து பொறுப்பில் உள்ள தலித் பெண்களுக்கு அரசு அதிகாரம் தர வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன நிகழ்ச்சி ஏற்பாடுகளில் ஒருங்கிணைப்பாளர் சாந்தி உதவியாளர்கள் பூங்குழலி சரஸ்வதி ஆகியோர் ஈடுபட்டனர் சென்னை கடலூர் திருவள்ளூர் ஆவடி இராணிபே ட்டை உள்ளிட்ட பத்து மா வங்களிலிருந்து நூற்றுகணக்கான தலித் பெண்கள் கலந்து கொண்டனர் இளைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவடைந்தன

# அரக்கோணம் ஒன்றிய திட்ட பணிகள்: கலெக்டர் சந்திரகலா ஆய்வு



**அரக்கோணம் டிச.12**

இராணிப்பேட்டை கலெக்டர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, அரக்கோணம் ஊராட்சி ஒன்றிய பல் பகுதிகளில் ஆய்வு செய்தார் அதன்படி தணிகைபோளூர் ஊராட்சி வணியம் பேட்டை கைனூர் முதல் கடவாசல் வரையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.9.31 இலட்சம் மதிப்பீட்டில் 100 நாள் வேலை பணியாளர்களின் நீர்வரத்துக் கால்வாய் தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்

ரூ.5.07 இலட்சத்தில் 28 இருளர் இன மக்களின் வீடுகள் கட்டப்படுவதை பார்வையிட்டும் ஆய்வு செய்தார்

தொடர்ந்து, உள்ளியம்பாக்கம் ஊராட்சியில் ஊரக குடியிருப்புகள் பழுது பார்த்தல் திட்டத்தில் கீழ் 27 வீடுகளின் பழுது பார்க்கும் பணிகளையும் வளர்புரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.29.91 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டப்பட்டு, வர்ணம் பூசும் வேலை நடைப்பதையும் ஆய்வு செய்தார் கடைசியாக அரக்கோணம் நகராட்சி பாப்பான் குளம் கால் வாயினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் .இந்த ஆய்வின்போது திட்ட இயக்குநர் .பா. ஜெயசுதா, வருவாய் கோட்டாட்சியர் வெங்கடேசன், செயற்பொறியாளர் செந்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாஸ்கர், ஜோசப் கென்னடி, உதவி செயற்பொறியாளர் ஜெரார்ட், வட்டாட்சியர் ஸ்ரீதேவி, ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன், ஒன்றிய பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள், துறைச் சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தென்னிந்திய திருச்சபை சார்பில்

# அகில உலக மனித உரிமை நாள் விழிப்புணர்வு ஊர்வலம்



**அரக்கோணம் டிச 12**

சென்னை தென்னிந்தியத் திருச்சபை சார்பில் அரக்கோணம் நகரில் அகில உலக மனித உரிமை நாள் விழிப்புணர்வு ஊர்வலம் . நேற்று மாலை அம்பேத்கர் வளைவில் புறபட்டது கூட்டம் பழையபஸ் நிலையத்தில் நிறைவடைந்தது இந்த , விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் கூட்டத்திற்கு சென்னைப் பேராய பொறுப்புப் பேராயர். சர்மா நித்தியானந்தம் தலைமை தாங்கினார். சிறப்பு அழைப்பாளராக பத்மநாபபுரம் சட்ட மன்ற உறுப்பினர் கலந்து கொண்டு பேசினார். பேராய நிர்வாகிகள் ஜெயசீலன் ஞானாதிக்கம் அகஸ்டின் பிரேம்ராஜ் சாமுவேல் கொர்னேலியஸ் ஜான் சாலமோன் இம்மானுவேல் ஈஸ்டர்ராஜன் பிரான்சிஸ் இன்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர் மத்திய வட்டாரத் தலைவர் இயக்குனர் இணை இயக்குனர் தலித் (ம) ஆதிவாசிகள் கரிசனை வாரியம் ஆயர்கள், குருசேகர நிர்வாகிகள், இறைமக்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் ஐடிதேவாசீர்வாதம் கவுதம் சந்துரு சாம்ராஜ் ஜீவநேசன் திருச்சி ஜேம்ஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அரக்கோணம் நகராட்சி கால்வாய் கலெக்டர் உத்தரவின் கீழ் ஜேசிபி இயந்திரம் கொண்டு மீட்பு



**அரக்கோணம் டிச 12**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரம் பழனி பேட்டையில் கால்வாய் ஆக்கிரப்பு அதிகரித்து இருப்பதால் அவைகளை மீட்கும் படி கலெக்டர் உத்தரவிட்டுயிருந்தார் அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சாலையோர நகராட்சி கால்வாய்கள் மீட்கும் பணி நேற்று ஆணையாளர் கன்னியப்பன் தலைமையில் நடைபெற்றது இதன் மூலம் 300 மீட்டர் நீளமுடைய இருபுறம் நகராட்சி கால்வாய் ஜேசிபி இயந்திரம் கொண்டு மீட்கும் பணிகள் தொடங்கின இப்பணிகளில் நகராட்சி பொறியாளர் செல்வகுமார் சுகாதார அலுவலர் வெயில்முத்து மற்றும் மேற்பாவையாளர் கலைமணி உள்ளிட்ட துப்புரவு பணியாளர்களும் ஈடுபட்டனர் இதனால் அப்பகுதி போர்களம் போல் காட்சி அளித்தது.

## மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு

# புயலலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நிதி வழங்க கோரி அதிமுகவினர் ஆர்ப்பாட்டம்

**செஞ்சி டிச -12.**

,பெஞ்சல் புயல் தாக்கத்தினால் விழுப்புரம் மாவட்டம் முழுவதும் சூறைக்காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. .

இந்நிலையில் தமிழக அரசு சார்பில் விழுப்புரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு வெள்ள நிவாரண நிதி ரூபாய் 2000 வழங்கப்படும் என தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் மேல்மலையனூர் வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பு மேல்மலையனூர் அதிமுக ஒன்றிய கழக செயலாளர்கள் புண்ணியமூர்த்தி, பாலகிருஷ்ணன் ஆகியோர் தலைமை தாங்கி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட வழக்கறிஞர் அணி பொருளாளர் அருண்தத்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி இணை செயலாளர் சத்யராஜ், மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு துணை செயலாளர் இ.ஜி. ஐயாத், ஒன்றிய அவைத் தலைவர்கள் கே.எம். துளசி, செவலப்பரை பூங்காவனம், ஒன்றிய இளைஞரணி செயலாளர்கள் செல்வம், ஒன்றிய கவுன்சிலர் ஈயகுணம் முரளி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதைத்தொடர்ந்து ஒன்றிய செயலாளர்கள் புண்ணியமூர்த்தி, பாலகிருஷ்ணன், ஆகியோர் தமிழக அரசையும் வருவாய்த்துறை அதிகாரிகளையும் கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினார்.

மேலும் இதில் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் லோகநாதன், நிர்வாகிகள் பாலா, மணிவண்ணன், தேவனூர் மணி, மேலச்சேரி தனம்சேகர் , தாழகுணம் சக்கரை, காசி, பாலாஜி ,எம் ஜி ஆர் பழனி, தனலட்சுமி லலிதா, ஜெயராமன் ,தருமன், ராமு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக ஒன்றிய சிறுபான்மையினர் பிரிவு செயலாளர் சலாவுதீன் நன்றி கூறினார்.

